tnkalvi.online

No. of Printed Pages : **5**

6209

பதிவு எண்

இரண்டாமாண்டு

தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

பகுதி - I

பிரிவு - அ

அனைத்து வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **100 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

1. தானங் கொடுக்கும், யார்க்குங்கயிறு

-இச்சொற்களைப் பிரித்தெழுதிப் புணர்ச்சி விதி தருக.

2. வினைமுற்று – குறிப்பு வரைக.

3. கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்

வேட்ப மொழிவதாம் சொல்.

-எனும் குறட்பாவில் 'வேட்ப' என்னும் சொல் எதனடியாகப் பிறந்தது ? அச்சொல் குறிப்பிடும் பொருள்களை எழுதுக.

4. கவிதை குறித்து கீட்ஸ், வோர்ட்ஸ் வொர்த் ஆகியோர் கூறியுள்ள கருத்துக்களை எழுதுக.

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/dee-second-year-tamil-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

5. அகராதியைப் பயன்படுத்திச் சொற்களுக்கு எவ்வாறு பொருள் கொள்வது என்பதைக் கூறுக.

மூன்று அகராதிகளின் பெயர்களை எழுதுக.

6. எடுத்துக்காட்டு உவமை அணியினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

7. பல் + பசை, அருள் + பா இச்சொற்களைச் சேர்த்து எழுதி புணர்ச்சி விதி தருக.

8. செய்யுள் யாக்கப் பயன்படும் உறுப்புக்களையும், செய்யுளுக்கு வழங்கப்படும் வேறு பெயர்களையும் எழுதுக.

9. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

தன்மானம் இல்லாத கோழைகளுடன் சேரக் கூடாது. துன்பத்தை நீக்கும் கல்வியினைக் கற்க வேண்டும். சோம்பலைப் போக்கிட வேண்டும். பிறருடன் வம்பு செய்யும் வழக்கம் இருந்தால் அதை விட்டு விட வேண்டும். வானம் தொடும் அளவுக்கு அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

(அ) இப்பத்தியின் மையக்கருத்து யாது ?

(ஆ) இப்பத்தியில் இடம்பெறும் இரு அருஞ்சொற்களை எழுதுக.

10. நாட்டுக்கு மறைமுகமாகச் செய்யும் துரோகச் செயலாகப் பேரறிஞர் அண்ணா எதனைக் குறிப்பிடுகிறார் ?

பிரிவு - ஆ

எவையேனும் 5 வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் **200 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

11. மாணவ ஆசிரியர்கள் தம் பேச்சாற்றலை திறம்பட வளர்த்துக் கொள்வதற்கான வழி முறைகள் யாவை ?

12. தொகை நிலைத் தொடர் என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும் ? சான்றுடன் விளக்குக.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/dee-second-year-tamil-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

13. கற்பனை என்றால் என்ன ? விளக்குக.

14. வழக்கு எத்தனை வகைப்படும் ? அதனைச் சான்றுடன் விளக்குக.

15. மாணவ ஆசிரியர்கள், முன்னிலை சிறுகதை எழுத்தாளர்களின் படைப்புகளை படிக்க வேண்டியதன் அவசியத்தை எழுதுக.

16. கீழ்க்காணும் பாடலின் நயங்களைப் பாராட்டி எழுதுக.

தைத்திங்கள் குளம்பூத்த பூவோ விண்மீன்!
தமிழ்வேந்தர் வெளியிட்ட சின்னக் காசோ!
மைத்தடங்கண் மடமாதர் உதிர்த்துப் பின்னர்
மாலைக்குத் தேர்ந்தெடுக்கும் முல்லைப் பூவோ!
தைத்திட்ட பட்டாடை முத்தோ! தீட்டித்
தரப்பட்ட ஒளிக்கல்லோ! சரிகைச் சேலை
உய்த்திட்ட பொடிப்பூவோ! தொலைவில் தோன்றும்
ஊரிட்ட மின் விளக்கோ விண்மீன் கூட்டம் ?

17. வீட்டில் அமைக்கப்படும் நூலகத்தில் எத்தகைய நூல்கள் இடம் பெறலாகா என பேரறிஞர் அண்ணா குறிப்பிடுகிறார் ?

18. கீழ்க்காணும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஓரறிவு உடைய புற்பூண்டுகள் முதல் ஆறறிவுடைய மக்கள் ஈறான பலகோடி உயிர்களுள் மக்கட் பிறவியே சிறந்தது என்பது எல்லோர்க்கும் தெரிந்த உண்மையன்றோ! ஏனெனில் ஆறாவதான பகுத்தறிவு மக்கட்பிறவி எடுத்த உயிர்கட்குப் பேரளவிலானதாய் அமைந்தாற்போல ஏனை சிற்றுயிர்க்கு அமையவில்லை.

(அ) இப்பத்தி எதைப் பற்றிப் பேசுகிறது ?

(ஆ) பகுத்தறிவு இல்லாத உயிர்களின் பண்பு யாது ?

(இ) சிற்றுயிர்கள் எனப்படுபவை எவை ?

(ஈ) மறைமலையடிகளின் உரைநடைச் சிறப்பு யாது ?

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/dee-second-year-tamil-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - II

பிரிவு - அ

அனைத்து வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **100 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

19. கலைத்திட்டம் அல்லது பாட ஏற்பாட்டின் இயல்புகளைக் கூறுக.

20. ஒரு சொல்லிலிருந்து பல சொற்களை உருவாக்கும் உத்தியைப் பயன்படுத்தி சொற் களஞ்சியத்தை எவ்வாறு பெருக்குவீர் ?

21. நவதானியங்கள், நவரத்தினங்கள் – தொகைச் சொற்களை விரித்து எழுதுக.

22. கடிதம் எழுதுவதன் நோக்கங்களை எழுதுக.

23. காலங் கடந்து நிற்கும் படைப்புகளில் ஏதேனும் நான்கின் பெயர்களை எழுதுக.

24. குறைந்தபட்ச கற்றல் அடைவரின் கீழ் தொடக்கநிலை மாணவர்கள் பெறவேண்டிய மொழித் திறன்களைப் பட்டியலிடுக.

25. எவையேனும் நான்கு மரபுத் தொடர்களையும் அவை உணர்த்தும் பொருண்மை-யினையும் எழுதுக.

26. இயந்திர மொழி – குறிப்பு வரைக.

27. ஒலிப்புப் பிழை, வரிவடிவப் பிழை இரண்டினையும் வேறுபடுத்துக.

28. தமிழில் வெளியிடப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க பல்லூடக விளையாட்டு மென் பொருள்களை எழுதுக.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/dee-second-year-tamil-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பிரிவு - ஆ

எவையேனும் 5 வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் **200 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

29. ஒரு நல்ல பாடத்திட்டம் பெற்றிருக்க வேண்டிய இன்றியமையாத கூறுகளைப் பற்றி விவரிக்கவும்.

30. சொற்களஞ்சியம் பெருக்கும் முறைகளை விளக்குக.

31. கற்பித்தலில் பிழைகளைக் களைவதற்கான படிநிலைகள் யாவை ?

32. தாய்மொழிக் கற்பித்தலில் மொழி பயிற்றாய்வுக் கூடத்தின் பங்கினை விளக்குக.

33. பல்லூடகமும் தமிழ் கற்பித்தலும் பற்றி விளக்குக.

34. அடைவுத் தேர்வின் நோக்கங்கள் யாவை ? அதன் வகைகளை விவரிக்கவும்.

35. கட்டுரை எழுதும் நோக்கங்கள் மற்றும் வழிமுறைகளை விவரிக்கவும்.

36. மொழி வல்லமைத் தேர்வு என்பது யாது ? அதன் நிறை குறைகளை விவரிக்கவும்.

பகுதி - III

ஒவ்வொரு வினாவிற்கும் **500 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **2x10=20**

37. (அ) பாடநூலின் இலக்கணம் மற்றும் பாடநூலை ஆய்வு செய்யும் முறையை விளக்குக.

அல்லது

(ஆ) கவிதை எழுதும் திறன் வளர்க்கும் உத்திகள் பற்றி விரிவான விடையளிக்கவும்.

38. (அ) மொழிப்பயிற்றாய்வுக் கூடத்தின் சிறப்புத் தன்மைகள், அளிக்கப்படும் பயிற்சிகள், பயன்கள் ஆகியவற்றை விளக்குக.

அல்லது

(ஆ) சிறந்த தேர்வின் பண்புகளை விளக்குக.

- o O o -

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/dee-second-year-tamil-2022 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share